அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 25/2023

எனது இலக்கம் : EST-01/MISCL/06/0032(II)
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2023.12.15

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்களின், நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்கள்

## 2024 ஆம் ஆண்டு - கடமைச் செயற்பாடுகளை ஆரம்பித்தல்

“வலுவான எதிர்காலத்துக்கான தொடக்கவுரை” என்ற தொனிப் பொருளின் கீழ், தற்போதைய சர்வதேச போக்குக்கு அமைவாக புதிய பொருளாதாரச் செயன்முறையொன்றுக்கான அடிப்படையை வழங்கி ஜனாதிபதியால் 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு முன்வைக்கப்படுகின்ற விடயங்களின் வாயிலாக, எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு, அரச சேவையிலுள்ள எங்கள் அனைவருக்கும் புதிய எதிர்பார்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்.

02. பொருளாதாரத்தில் ஏற்பட்ட பின்னடைவின் போதிலும், பொதுச் சேவைகளின் தொடர்ச்சியைப் பேணுவதற்கு அரச ஊழியர்கள் காட்டிய அர்ப்பணிப்பை பாராட்டுக்களுடன் நினைவு கூருவதோடு. பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்களின் கீழ், , வறுமை ஒழிப்பு, வேலையின்மையைக் குறைத்தல், உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்துதல் மற்றும் அந்நியச் செலாவணி உழைப்பு அதிகரித்தல் என்பவற்றுக்காக அரச சேவையிலுள்ள உங்கள் அனைவரினதும் செயலூக்கமான பங்களிப்பும் அர்ப்பணிப்பும் மேலும் தேவைப்படுகின்றன.

03. வரலாற்றில் முன்னொருபோதும் அனுபவித்திராத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவாறு முன்னோக்கிப் பயணிக்கும் இக்காலப் பகுதியில், உலகில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த நாடுகள் அந்தச் சவால்களை வெற்றி கொள்வதற்கு அறிமுகப்படுத்திய மறுசீரமைப்புக்கள் பற்றி ஆராய்ந்து, பொது மக்களுக்கான சேவை வழங்கலின் வினைத்திறன் உறுதிப்படுத்தப்படுகின்ற அத்தியவசியமான மறுசீரமைப்புக்களை அரச சேவையில் அறிமுகப்படுத்தி, அரச செலவுகளைக் குறைத்தல் மற்றும் அரச வருமானத்தை அதிகரித்தலின் மீது நீங்கள் அனைவரும் முன்னரை விடக் கவனம் செலுத்துதல் வேண்டும்.

04. 2024 ஆம் ஆண்டில் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முதல் நாளான சனவரி மாதம் 01 ஆம் திகதி திங்கட்கிழமை அனைத்து அரச ஊழியர்களினதும் பங்கேற்புடன் தங்கள் சேவை நிலையங்களில் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு உத்தியோகபூர்வ வைபவங்களை நடாத்துதல் வேண்டும். அதன் பிரதான வைபவம் அன்றைய தினம் மு.ப. 9.00 மணிக்கு சனாதிபதியின் தலைமையில் சனாதிபதி அலுவலக வளாகத்தில் நடைபெறும். பொதுமக்களுக்கு வினைத்திறனான மற்றும் பயனுள்ள பொது சேவையை வழங்குவதற்கு, முழு பொது சேவையும் அதில் உறுதியான மனத்திட்பத்துடன் ஈடுபட வேண்டும் என்பதனால் அதனுடன் இணைந்த வகையில் அன்றைய தினத்தில் அதே நேரத்தில் பின்வரும் நிகழ்ச்சிகளை தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் வேலைத் திட்டத்தைப் பயன்படுத்த வேண்டும்.

I. தேசிய கொடிய ஏற்றுதலும் தேசிய கீதம் பாடுதலும்.
II. இராணுவ வீரர்கள் உள்ளிட்ட நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூர்வதற்காக இரண்டு (02) நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துதல்
III. பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களும் தமக்கு வசதியான மொழியொன்றில் தத்தமது இடங்களிலிருந்து இருந்து இத்துடன் அனுப்பபபட்டுள்ள அரச சேவை உறுதியரையை/ சத்தியப் பிரமாணத்தை உரத்து வாசித்தல்.
IV. தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரச கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்கள் பற்றியும் அந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு அரச ஊழியர்களின் பங்களிப்பு பற்றியும் அவர்களை உற்சாகப்படுத்தி சிறிய உரையொன்றை நிகழ்த்துதல்.

05. இந்நிகழ்ச்சியைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதில் முன்னின்று நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./கே.டி.என் ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011-2662340
தொலைநகல் : 011-2692158
மின்னஞ்சல் : ade-i@pubad.gov.lk

பிரதிகள் :

| | | |
|---|---|---|
| 1. கௌரவ மாகாண ஆளுநர்கள் | - | தகவல்களுக்காக |
| 2. ஜனாதிபதியின் செயலாளர் | - | நடவடிக்கைகளுக்காக |
| 3. பிரதமரின் செயலாளர் | - | நடவடிக்கைகளுக்காக |
| 4. அமைச்சரவைச் செயலாளர் | - | நடவடிக்கைகளுக்காக |
| 5. கணக்காளர் நாயகம் | - | நடவடிக்கைகளுக்காக |

# அரச சேவை உறுதியுரை / சத்தியப் பிரமாணம்

இரண்டாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டின் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முதலாம் நாளாகிய இன்று, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, இலங்கை வாழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை யதார்த்தமாக்கும் புது வருடமொன்றின் ஆரம்பத்தைக் கொண்டாடுகின்றது.

இன்றுடன் ஆரம்பிக்கும் புது வருடத்தில்

ஒரே நாட்டில், ஒரே தேசத்தில், ஒரே கொடியின் நிழலில்

ஐக்கியமாகவும் ஒருமித்த மனதுடனும் மலரும்

பாதுகாப்பான எமது தாய் நாட்டினுள்

"வலுவான எதிர்காலத்துக்கான தொடக்கவுரை" என்ற கருப்பொருளை முன்னிறுத்தி

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் மெய்ப்படுத்தி

மக்கள் மையப் பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்கு

வினைத்திறன் மிக்க மனித வளத்தினைக்கொண்ட

அரச நிர்வாகத்தின் பங்காளராகிய

நான்

மக்களின் பணத்தில் சம்பளம் பெறும் ஓர் அரச ஊழியர் என்ற வகையில்

அரச கொள்கைகளையும் குறிக்கோள்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு

என்னிடம் ஒப்படைக்கப்படும் பணிகளை

வினைத்திறனுடன்,

பயனுறுதி வாய்ந்தாக,

உறுதியான எண்ணத்துடன்,

அதிகபட்ச அர்ப்பணிப்புடன்,

நேர்மையாக,

மக்களுக்குச் சார்பாக,

நிறைவேற்றுவதாக உறுதியளிக்கிறேன்/ சத்தியப் பிரமாணம் செய்கின்றேன்.